ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணு 2. சிலோன் 15 சதம் REGD. NO 4642

திராவிட நாடு

மலர் 11. | 26—10—52 | இதழ் 17

பாசவலை

காடு, பெரிதாகயிருப்பது புலிக்குச் சந்தோஷமான சங்கதி!

நாடு பெரிதாகயிருப்பது வியாபார முதலைகளுக்கு கொண்டாட்டமான விஷயம்!!

வியாபாரப் போட்டிகளால் நொந்தளிக்கும் இந்த நூற்றுண்டு, அறியாத விஷயமல்ல இது.

"மகளைத் தா மறுத்தானு? வாள், எடு! முரசு கொட்டு!!" எல்லையைத் தாண்டினுனுமே! முழக்கு சங்க நாதத்தை!!, "எதிரிக்கு ஓலை விடுத்தானு? என்ன துணிவு! புறப்படட்டும் இரத கஜதுரகபதாதிகள்!"—என்று, மன்னுதி மன்னர்கள், மோதிக்கொண்ட காலம் ஓடிவிட்டது. போர், இப்போது நடைபெறுவது இதற்காகவல்ல! துப்பாக்கியும், அணுகுண்டும் முழக்கும் ஒலி, மார்க்கட் போட்டியால் ஏற்படுவதாகும். தந்தமது பொருள்களை விற்றுப் பணம் திரட்ட, மார்க்கெட் பிடிக்கும் ஆசைகளாலேயே இந்த நூற்றுண்டு, போர்களையும் பொல்லாங்குகளையும் கண்டுகொண்டிருக்கிறது. தொழில் வளர்ச்சி கண்டு 18வது நூற்றுண்டு மனிதன் களித்தான்! அது தரும் தொல்லைகளைக் கண்டு இந்த நூற்றுண்டு மனிதன் திகைக்கிறுன்!! நாடுகள் பல அடிமையானதும், அந்நியரின் நாச நர்த்தனம் அங்கெல்லாம் நடைபெற்றதும், அவர்களை எதிர்த்துக் கிளம்பிய சுதந்திர கீதமும், அதனையடக்க வெடித்த வேட்டு சப்தமும், இறந்த உயிர்களும், ஓடிய இரத்த வெள்ளமும், 'மார்க்கெட் பிடி சண்டை'யால் விளைந்தவைதான். இந்த வேதனைகளை, முதலாவது உலகப் போருக்குப் பின்பு விளக்கி விளக்கி ஏராளமான அறிஞர்கள் பேசினுர்கள் — எழுதினுர்கள்—சர்வதேச மாநாடுகளெல்லாம் நடைபெற்றன. ஆனுலும், அந்த ஆசை முடிந்துவிடவில்லை. தொழில் துறையில் அபரிமித வெற்றிக்கு ஆளான நாடுகளுக்கு, தாம் தயாரித்த பொருள்களை விற்க, இடம் தேவையாக இருக்கிறது. 'தேவையான இடங்களை'த் தேடினுன்—குடியேறினுன்—கோலோச்சினுன் — குமுறியோரைக் கொட்டினுன். ஆனுல், அந்நியனின் அவதிக்கு ஆளான பூமிகளில், உதயமான தேசிய கீதம், வெள்ளம் போல் கரை புரண்டது! கர்ஜனை கேட்டது!! அதன் எழுச்சி கண்ட ஆதிபத்யக்காரன், தன் குரலை அடக்கிக்கொள்ள வேண்டியவனுனுன். வெடித்த துப்பாக்கி ஓய்ந்தது! அடித்த கைகள், குலுக்கின!! நேசம் பாராட்டினுன். பாசம் காட்ட வேண்டியவனுனுன்—'பலிக்காது இனி, ஜம்பம்' என்பதை உணர்ந்ததால், இந்த உணர்ச்சியை, இரண்டாவது உலகப் போருக்குப் பின் எளிதில் பெற்றனர், வெள்ளைக்காரர்கள். அஸ்தமிக்காத சாம்ராஜ்யமென, கடலலைகள் தாலாட்டும் இங்கிலாந்துத் தீவுக்குப் புகழ்மாலை சூட்டிய அவர்கள், தமது சாதுர்யத்தை வீசினுர்கள். விஷ விருட்சம் போல் வளர்ந்திருந்த தேசிய இயக்கத்தைக் காண மருண்டனர்—மயங்கினர். "நமக்குள் எதற்கு, சண்டை? நியாயம்தான் நீங்கள் கேட்பதும். சுதந்திரம் மனிதனுடைய பிறப்புரிமைதான்" என்று, வார்த்தை ஜாலங்களை, வழங்கினர். அட்லீ, அறிவித்தார்! மவுண்ட் பேட்டன் துரை மகனுரும், வார்தா சீடர்களும் நண்பர்களாயினர். விருந்துபசாரங்களும், தேசிய வெற்றிக் கீதங்களும், நாட்டில் நிரம்பின! அலங்கரிக்கப்பட்ட விளக்கொளிகளுக்கிடையே, அறிவுக் கண்கள் கூசுமளவுக்கு, ஆனந்தக் கூத்தாடினுன், அல்லும் பகலும் பசியைத் தவிர எதுவும் அறியாத நாட்டுப்புற ராமன் முதல், சுயராஜ்யத்துக்காகத் தடியடி தாங்கிய பட்டணக்காரப் பலராமன் வரை. வெள்ளையன் வெளியேறினுன்!—என்கிற, குதூகலச் சொல், அவனது காதுகளைச் செவிடாக்கிற்று. ஊமையானுனன், ஆனந்தத்தால்! குதூகலம், கண்களைக் குருடாக்கிற்று!! நாமோ உலக அரங்கில், அ[illegible] 'சீன்' முடிந்தவிட்டது — அடுத்த 'கட்டம்' சோகமாயிருக்குமெனக் குறிப்பிட்டோம். வில்லன், விரண்டோடியது உண்மை! ஆனுல், கதாநாயகனுக்குப் பயந்து ஓடினுன் என்று மட்டும் நம்பாதீர். அது, அடுத்த கட்டத்தில் புரியும் என்றோம். கேலி பேசினர், 'காலரி' கனவான்கள்! கிண்டலைக் கொட்டினர், 'நாற்காலி' சீமான்கள்!!

"சுயராஜ்யம், வரவில்லை என்கிருயா?"

"வந்தது உண்மை—ஆனுல் அது உமது தீரத்தினுல் மட்டும் என்று எண்ணுதீர்"

இவ்விதம், உரைத்தோம். காரணம், காங்கிரஸ் கட்சியால் சுயராஜ்யம் வந்தது என்கிற அசூயையால் அல்ல! உலகத்தில் முதலாதிக்கம் அடைந்துவரும் படிப்படியான மாறுபாடுகளை உணர்ந்ததால்!! அதனுலேயே குறிப்பிட்டோம்—"வெள்ளையன் போய்விட்டான் என்பது உண்மை. அது அவனது ராஜதந்திரத்தைக் குறிக்கிறது. அவனுக்கு இப்போது ஆதிக்க அரசு அல்ல முக்கியம், பண அரசு! அது நீடிக்க வழியமைத்துக்கொண்டான்"—என்பதாக. நமது கூற்றைக் கேட்ட நண்பர்கள், கண்களைச் சிமிட்டிக் காட்டினர். எமது நேருவின் இல்லம் நோக்கி திருமதி மவுண்ட் பேட்டன் தேடிவருவது காணீர்! என்றனர். வெள்ளைச் சீமான்கள், 'இந்திய சுதந்திர'தினத்தைக் கொண்டாடிய காட்சிகளைக் கேளீர்! என்று சொல்லினர். வெள்ளைத் தலைவரும், இந்தியத் தலைவரும் ஒருவரையொருவர் அணைத்துக்கட்டித் தழுவுவதைப் படமாக்கிக் காட்டினர்! உண்மையில், மேற்படி காட்சிகள்யாவும், குதூகலத்துக் குரியவைதான். தோல்வியுற்ற வீரன், மனம் துவண்டுதான் செல்வான்! 'அலைகடல் கிழிக்கும் கப்பற் படையெம்மிடம் இருக்கிறது' என்று கர்ஜித்தவன், கப்பலே காணுத மக்களால், விரட்டியோட்டப்பட்டால், இதயம் விம்மித்தான் வெளியேறுவான். ஆனுல், வெள்ளையன், ஆனந்தத்தோடு வெளியேறினுன். மகிழ்ச்சி நிரப்பிய கண்களோடு, சென்றுன். ஆதிக்கத்தை இழப்போருக்கு ஆனந்தம் ஏற்படுவதேன்? — என்று சிந்தித்தோரின் தொகை கொஞ்சம். அவர்களில் நாமும் இருந்தோம். திகைப்புடன், திரும்பிப்பார்த்தோம். வெள்ளையர்களின் கம்பெனிகள் போகவில்லை! தேயிலைத் தோட்டங்கள் கைப்பற்றப்படவில்லை! ஆலைகள், அப்படியேயிருந்தன! சுதந்திர நாளுக்குப்பின், இன்று வரை நிலைமையைக் கவனித்து வருவோருக்கு, அவன் ஆனந்தத்தோடு வெளியேறியதன் காரணம் விளங்கும். தோல்வியுற்ற வில்லன், கதாநாயகனை அழிக்கத்தான் வழிகோலுவானே தவிர, அவனோடு கொஞ்சமாட்டான். ஆனுல், வெள்ளையர் கொஞ்சினர்! விருந்துபசாரம் அருந்தினர்!! இந்த விசித்திரமான காட்சிகளில்தான் அவர்களது சூட்சுமம், இருக்கிறது. வேட்டுச் சப்தத்தால் விடுதலை இயக்கத்தை ஒடுக்க நினைத்தவன், விருந்துபசாரங்கள் நடத்தியதில்தான், வெள்ளையாதிக்கத்துடைய புத்தி கூர்மை புதைந்து கிடக்கிறது.

வெள்ளையன், ஆட்சிப் பொறுப்பை, இழந்தான். ஆனுல், அவனுக்குத் தேவையான மார்க்கெட்டை, அவன் இழந்துவிடவில்லை. இந்த ஒப்பந்தம்தான், அவனுக்கு குதூகலத்தை அளித்தது. "காமன் வெல்த்"—என்று சொன்னுன். "ஆகா! அதற்கென்ன?" என்று பதிலளித்தனர், தேசியத் தலைவர்கள். "எனக்கு கஷ்டம்வரும் போலிருக்கே!"—என்றுன். "நாங்களும் பங்கு கொள்வோம்!"—என்றனர் இந்தியத் தலைவர்கள். விரட்டியவர்களுக்கும், விரண்டோடியதாகக் கூறப்பட்டவனுக்குமிடையிலே இந்த விசித்திர நாடகம் நடந்தது. இங்கிலாந்துச் சீமான்களும், இந்திய ஆலையரசர்களும் கை கோர்த்துக் கொண்டனர். பலவித நெருக்கடிகளுக்கிடையே காப்பாறறவேண்டியிருந்த ஆதிக்க அரசு, போனது உண்மை. ஆனுல், அவனுக்குத் தேவையான பண அரசு, போகவில்லை! அதுபோகாமலிருப்பதற்கான சூட்சுமத்தைக் கையாண்டான்!

அந்தச் சூட்சுமத்தின் விளைவுகள்தான், இங்கே நீடித்திருக்கும் வெள்ளை வியாபார ஸ்தாபனங்கள். இன்று வரை நீடித்துவரும், பரஸ்பர நேச மனுேபாவம்.

குண்டுகளும் தடியடிகளும் தந்த தழும்புகளை மறந்துவிட்டு, வெள்ளையனுேடு கை கோர்த்துலவுமாறு செய்தது, அவன் வீசிய பாசமும் நேசமும்தான்.

இந்தக் கட்டம் முதலாதிக்கத்தின், வீழ்ச்சியான கட்டமல்ல—அதன் சாதுர்யம் நிரம்பிய 'சீன்' ஆகும்.

விரோதத்தால் தொடர்புகளை அறுத்துக்கொள்ளுவதைவிட, பாசத்தால் பண அரசைப் பாதுகாத்துக் கொண்டனர்.

இரண்டாவது உலகப்போருக்குப்பின் முதலாளித்துவம், கையாண்ட யோகனமான முறை இது. மக்கள் எரிமலையாக இருக்கும் இடங்களிலெல்லாம், அவர்களை அடக்கியாண்ட அந்நியர், வளைந்து கொடுப்பதென முடிவு செய்ததற்குரிய காரணமும் இதுதான்.

இந்தச் சூட்சமத்தை கையாளுமாறு, சென்னை கவர்னர் பிரகாசா குஜராத்திகளுக்கு உபதேசம் செய்திருக்கிறுர். கடந்த 21ந்தேதி, சென்னை குஜராத்தி ஆண்டுப்பிறப்பு விழாவில் பேசிய பிரகாசா, இந்த தந்திரமுறையை அறிவித்திருக்கிறுர்:

மக்களைவிட்டுப் பிரிந்திருக்காதீர்கள்! — என்று, போதனை செய்திருக்கிறுர்.

"மொழிமீது மோகம் காட்டி மக்களைவிட்டுப் பிரிந்திடாதீர்கள்," என்று உபதேசித்திருக்கிறுர்.

மக்களோடு உறவாட வேண்டுமாம்!—குஜராத்திகளுக்கு, கவர்னர் தந்த உரை இது. ஏன் தெரியுமா? அப்போதுதான் வியாபாரவர்க்கம், வளரமுடியுமாம்! "எமதுமொழிக்கு ஈடு எது? என்று மொழிமோகத்தைக் காட்டிக் கெட்டுப்போகாதீர்கள். மக்களை விரோதித்துக்கொள்ளாதீர்கள்" என்றும், தெரிவித்துள்ளார், அவர்.

மக்களை விரோதித்துக்கொள்ள வேண்டாம் என்று, குஜராத்திகளுக்குப் போதனை புரிகிறுர். பாசமாக நடந்துகொள்ளுமாறு, யோசனை கூறுகிறுர்.

வியாபாரத் திமிங்கலம் வெள்ளையன் கையாளும் சூட்சமம், வடக்கத்திய மனிதராம் பிரகாசாவுக்கும் தெரிந்திருக்கிறது. அவன் பாசம் காட்டுகிறுன் இந்தியாமீது! அதே பாசப் பாதையைத் தம்மவருக்கும் காட்டுகிறுர் பிரகாசா!!

"மொழி மோகத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்—அதைக்காட்டினுல் மக்களின் விரோதத்தைப் பெற்றிடுவீர்கள்"—என்றும், தெரிவித்துள்ளார்.

"ஆதிக்க மோகத்தைக் காட்டிக் கொள்ளாதீர்கள். அது தெரிந்தால், இந்திய மக்களின் விரோதத்தைப் பெற்றுவிடுவீர்கள்" — என்றுன் வெள்ளைக்காரன். அதே வார்த்தைகளைச் சிறிது மாற்றிச் செப்புகிறுர், பிரகாசா.

மொழி மோகத்தால் உங்களை மக்களிடமிருந்து, துண்டித்துக்கொள்ளாதீர்கள்" — என்று அறிவுரை, வழங்குகிறுர், மாகிலக் கவர்னர், 'தனது' மக்களுக்கு.

அறிவுரை, மகிழ்ச்சி தரக்கூடியதுதான்! "அச்சா, மதராஸ்வாலா!" என்று, ஹிந்தியில் அவனழைக்க, "என்னடா, மதராஸ்வாலாவா? குஜராத்திக்குறும்பா!" என்று நம்மவர்சிற, அதனுல் கைகலப்பும்

(-5ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 26—10—52 [ஞாயிறு

மகஜர்!

★

"சாமி! தவிக்கிறோம்—வசதி செய்து கொடுங்கள்"

"பஞ்சம் தாண்டவமாடுகிறது. வயல்கள் வெடித்துக் கிடக்கின்றன. நீர்ப்பாசனத்துக்கு வழி செய்யுங்கள்"

"எங்கள் கஷ்டத்தை சொல்ல முடியாது. இக்குறை தீர்ப்பீர்! எம்மைக் காப்பீர்!"

*

'மந்திரி, மாத மும்மாரி மழை பெய்கிறதா,' என்று மன்னர் கேட்க, 'மழை பெய்வதைக் கூடத் தெரியாத அளவுக்கா நமது அரசர் சப்ர மஞ்சக் கூடத்தில் திளைக்கிறார்' என்று யோசியாது, 'ஆம், மன்னவா!' என்று அறிவிக்கும், காட்சிகளை, பழைய நாடகங்களில் கண்டிருக்கிறோம். மதோன்மத்தரான அத்தகைய மன்னர்களிடம் சென்று, "மாமன்னவ! நாங்கள் இந்த இடத்து குடிகள். எங்கள் குறைகள் இன்னின்னவை. இவைகளைப் போக்குவீர்! காப்பீர்!!" என்று குடிமக்கள் கோரினால், கோவ்வை இதழிலும் அந்தப்புரத்து கேளிக்கையிலும் திளைத்துக் கிடக்கும், மன்னனுக்குக் கோபம் எழும்! கொதித்துச் சீறுவான், குடிமக்களிடம்!! மக்கள் குரல்களோ, அத்தகைய மன்னுநி மன்னர்களைக் 'கொடுங்கோலர்' என்று, கூறும். இவரது ஆட்சியினும் காடு நன்று! கடும்புலிகள் வாழும் காடு நன்று!! — எனச் சபித்துச் செல்வர். இத்தகைய தர்பார் நடத்திய மன்னர்களின், காலத்தில் காமிலை இப்போது. இது மக்கள் அரசு நிலவும் காலம்! நம்மை நாமே ஆண்டுக்கொண்டிருக்கும் புதுயுகம்! — இப்போது, கொடுங்கோலன் குரல் ஒலிக்கிறதென்றால், எவரும் நம்ப முடியாது. மக்கள், மன்னர்கள் காலத்தில், அரசவைக்குச் சென்று குறைகளை ஒப்பிப்பர்! இப்போதோ, மந்திரிகள், மக்களைத் தேடிச் சென்று குறைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஜனநாயகம், வழங்கியிருக்கும் இந்த நல்ல முறையின் விளைவுகளை விரும்பியே, மக்களைக் கண்டு பேசிவருவதற்கான 'அலவன்சு'களையும் மந்திரிகளுக்கு, நாம் தந்து வருகிறோம். ஜனநாயக அரசில் உள்ள முக்கிய அம்சங்களில் இதுவும் ஒன்று! மந்திரிமார்கள் மக்களைச் சந்திப்பதும், மக்கள் அமைச்சர்களைக் காண்பதும், அபூர்வ நிகழ்ச்சிகளாகயிருக்கக் கூடாது. அவ்விதம் சந்திக்கும் போது, மக்கள் கூறும் கோரிக்கைகளைக் கேட்க மறுத்தலும் தகாது—கூடாது. மக்களின் சர்க்கார், என்ற பெயருக்கு, அது களங்கத்தை விளைவிக்கும். இந்த, அடிப்படைகளை, எவரையும்விட நண்பர் ஆச்சாரியார் அவர்கள் நன்கு அறிந்தவர் என, இதுகாறும் நினைத்திருந்தோம். அவர் பெயளவில் 'சக்ரவர்த்தி' தானே யொழிய, சக்கரவர்த்தியல்ல! என்று கருதி வந்தோம். மக்களின் குறைகளைத் தெரிந்துகொள்ள விரும்புபவர்—என்றோர், நம்பிக்கையும் நமக்கு இருந்ததுண்டு. ஏனெனில், மந்தகாச முகவதிகள் புடைசூழ, மலர் தூவப்பட்ட கட்டிலிலே அமர்ந்து, ஓவியன் தீட்டிய ஒய்யாரமான சித்திரங்களைக் காட்டி, அதரபானமும், இதர விருந்துகளும் அருந்தி, ஆடிப்பாடி, கேளிக்கையால் களைத்து, 'சற்று வீசடி மானே!' என்று சல்லாபித்துக் கிடக்கும், உல்லாசச் சீமானல்ல, அவர். மக்களைச் சந்திக்கப் பயப்படும் ஆதிக்க வாதியுமல்ல! தன்னைச் சந்திக்க வரும் மக்களைக் கண்டு மிரண்டோடும் 'பிரெஞ்சு லூயியின்' குணாதிசயம், அவரிடம் இருப்பதற்கு இடமில்லை யென்றே, இதுகாறும் கருதி வந்தோம். எவ்வளவோ மாசு அவர்மீதிருந்தாலும், இந்த மனோபாவம் மட்டிலும் அவரிடம் இருக்காது என்றெண்ணினோம்! அவரும் ஒரு தேசியத் தொண்டராக இருந்தவர் — வக்கீலாக வாழ்ந்தவர் என்பதால். ஆனால், "அதிகார போதை — எவரையும் ஆட்டிப் படைக்கும். நான் மட்டிலும் விதிவிலக்கோ?" என்று தெரிவிப்பது போல, திருப்பதியிலே, நடந்து கொண்டிருக்கிறார்—தன்னிடம் 'மகஜர்' சமர்ப்பிக்க வந்தவர்களைப் பார்த்து.

பேட்டி! மகஜர்!!—இந்த இரண்டு வார்த்தைகளையும் நமக்குத் தந்தவர், வெள்ளையர்கள். இந்த இரண்டு வார்த்தைகளையும் வைத்துக் கொண்டு, அன்று தேசிய இயக்கத்தினர், எள்ளி நகையாடிய கூட்டங்கள் ஏராளம். சர்க்காரிடம் போக, பேட்டி வேண்டுமோ? மகஜர் செலுத்துமளவுக்கு மக்களை ஆளும் சர்க்காருக்குப் பெயர்தான் நல்ல சர்க்காரோ?—என்றெல்லாம், தேசிய இயக்கத்தினர், சினத்தோடு சீறிய நாட்கள் அவை. உண்மையுங் கூட! நல்லாட்சி நடைபெற்றால், மகஜர் செலுத்தவேண்டிய நிலை, மக்களுக்கு ஏற்படாதுதான்.

இதை நன்கு அறியக்கூடிய, புத்திச் சாதுர்யம், படைத்தவர்தான் ஆச்சாரியார். அதனால்தான் சினந்து சிந்தைநொந்து அவர்செப்பியசொற்களைக் கேட்டதும், திகைத்தோம். அவர் சர்வாதிகாரி அல்ல! சப்ர மஞ்சகூடத்து இளவரசருமல்ல! பூமானுமல்ல; சீமானுமல்ல! மாளிகையிலிருந்து இறங்குவது மகாபாபம் எனும் எண்ணம் ஏற்படக்கூடாதவர்! அத்தகையவரே அந்த சொற்களை கூறியிருக்கிறார், சிந்தை நொந்து கூறியிருக்கிறார்— சிந்தை நோகுமளவுக்குச் சென்றதற்குக் காரணம், சினம். கோபம், பாபம், சண்டாளம்!—இந்த, வாசகம், அறிந்தவர் அவர். கோபத்தால் விச்வாமித்திரர் கெட்ட கதையையும், திருப்பதியிலே, கவனமூட்டியிருக்கிறார், மாஜி காங்கிரஸ்காரர்களுக்கு. புராணக் கதையையும், மனிதாசாரத்தையும், மதிப்பதாகக் கூறும் அவர், சினத்துக்கு அடிமையாகி, சீற்றத்தோடு வெளியிட்டிருக்கிறார்—சிந்தை 'நொந்து' கொள்வது, போல.

திருப்பதியிலே, தீராதவினையெல்லாம் தீர்த்துவைக்கும் வெங்கடாசலபதியின் திருத்தலத்திலே, ஏழைகள் இருநூறுபேர், தமது குறைகளைக்கூறும் 'மகஜர்களோடு' பேட்டி கண்டனராம், ஆச்சாரியார் அவர்களை. "எல்லாம் ஈசுவரன் கிருபை! அனுதினமும் வந்து ஏழுமலையானுக்குப் பூஜை செய்யுங்கள். கோவிந்தா, கோவிந்தா என்று புலம்புங்கள். குறைகள் போய்விடும்", என்று, தப்பித்துக் கொள்ளும் பதிலை, அவர்களை நோக்கிக் கூறவில்லை, அன்பர் முதலமைச்சர். அவ்விதம் கூறியிருந்தால், அவர்கள் அழுதழுது வடித்த கண்களையும், ஒட்டிய அடிவயிறுகளையும் காட்டி, 'ஐயா! நீர் கூறும் முறைகளையெல்லாம் இதுவரை அனுஷ்டித்தவர்கள்தான், நாங்கள். ஏழுமலையானைத்தெரிசிக்க, நீங்களாவது காரில் வந்து போகிறீர்கள். நாங்கள் கால்கடுக்கத் தினசரி நடந்து நடந்து மலையுச்சிக்குச் சென்றோம். தீபாராதனை கண்டோம். பலன் ஒன்றுமில்லை! பட்டினிதான்!!" என்று கூறிவிட்டால், சந்திசிரிக்குமே, நன்கிலை. அதனால், அந்த நேரத்துக்கு மட்டும், ஆண்டவன் மீது பாரத்தைப் போடவில்லை, ஆச்சாரியார். மகஜர் கொண்டு வந்த மக்களைப் பார்த்துக் கேட்டாராம், "உங்களை அழைத்து வந்தாரே மேஸ்திரி அவர் அல்ல உங்களது தலைவர். தெரியுமா? அவரால் ஒன்றும் முடியாது! நான்தான் குறைகளைக்களைய வேண்டியவன்!!" என்பதாக. நிச்சயம், மக்கள் மகிழ்ந்திருப்பர், இதனைக் கேட்டதும்! 'குறைகளைக் கூறினோம்—நான் தானே களையவேண்டியவன்' என்று, ஆதரவோடு செப்பினர் அமைச்சர், என்று ஆனந்தமடைந்திருப்பர். சாதாரணகாரியமா, சர்க்காரைக் காண்பதும், மகஜர் தருவதும், அதைப் பெற்ற மந்திரியார் 'நான் செய்கிறேன்' என்று உறுதி தருவதும். மகிழ்ந்துதானிருப்பர் மக்கள்! ஒளியிழந்த அவர்தம் கண்களில் நன்றி வீசியிருக்கும் — நம்பிக்கை மலர்ந்திருக்கும். ஆனால் அந்த, 'விநாடி இன்பத்தையும்', அவர்களுக்கு விட்டுவைக்க வில்லை, அன்பர் ஆச்சாரியார்.

"உங்கள் மகஜர்களைக் கண்டேன். என் பூர்வஜென்மபாபங்கள் இந்த ரூபத்தில் வந்து முறைத்துப்பார்ப்பது போலிருக்கின்றன, அந்த மகஜர்கள்"

என்பதாக,மொழிந்துள்ளார்!மக்கள் தந்தது மகஜர். அவை பூர்வ ஜென்ம பாவங்களாம்! சிந்தை நொந்துகொள்வதுபோலச் சினத்தைக் கக்கியிருக்கிறார். மக்களின் மகஜர், பூர்வஜென்ம பாபமாம்!! மொழிந்துள்ளார், நம் முதலமைச்சர். தமது வாழ்க்கைக்கான வசதிகளைச் செய்து தருமாறு, மக்கள் வேண்டினர்—அந்த மகஜரில். அது பூர்வ ஜென்மபாபமாம்! புனிதர், கூறியிருக்கிறார்!! விந்தையான வாதம் இது. வேதனையைச் சொல்ல வந்தனர், மக்கள். விசித்திரவாதம் கூறி சிந்தை நோகச் செய்திருக்கிறார் ஆச்சாரியார். பூர்வ ஜென்ம பாபங்களாம், மக்களின் குரல்!— இவ்வளவு வேதனையேன் அவருக்கு. கையிலே ஜாலரா ஏந்தி, வாய் ராம நாமம் உச்சரிக்க, குற்றாலம்சென்று கம்பரசிகரோடு, ஜீவன்முத்தி பெறலாமே! ஏன், செங்கோல் ஏந்த வேண்டும்? நாடு என்ன பஜனை மடமா! அல்லது 'பக்தர்கள்' வழியும் கோவில் பூஜையறையா!!பாலும் பழமும் அருந்திவிட்டு, அர்ச்சனை காசும் பெற்றுக்கொண்டு, 'சீமாச்சு! சங்கதி தெரியுமோ? ராஜாஜி நல்ல பக்திமான். பகவான அனுக்ரகம் பெற்றவர்' என்று, எல்லோரும் பாடிக்கொண்டிருக்க வேண்டுமா? என்ன அர்த்தத்தில் இவ்வுரை புகன்றார் எனப்புரியவில்லை! ஆச்சாரியார் கூறிய பதில்போல,பலவார்த்தைகளை பிரெஞ்சுப் புரட்சியிலும், ருஷ்ய சரிதத்திலும் கேள்வியுற்றிருக்கிறோம். அவர்களது வாயிலிருந்து உதித்தற்குக் காரணம், ஆதிக்கத் திமிர்! தான் எனும் மமதை!!, "நான் எனும் அகந்தை யொடுங்கி நாராயணனைப் பழிக்கும்", ஜீவன் முக்தரெனத் தம்மைக் கூறித் திரியும் ஆச்சாரியாரா சொல்வது, இதனை மகஜர்,! பாவசொரூபமாம்! ஆம், எனில் அந்த பாபசொரூபத்தை பரவவிட்ட, பரமபிதாவைக் கேட்பது தானே? "வெங்கடேசப்பிரானே! அலர்மேலு மங்கைவாசா! பூர்வ ஜென்மபாவங்களைப் போக்கப்பா— நான் எவ்வளவு பெரிய பக்தன். உனது தொண்டன்தானே, இப்போது ராஜாங்கத்தை ஆள்கிறேன். என்பூர்வ ஜென்ம பாபங்கள், இப்படி நாட்டைப் பிடிக்கின்றனவே. கண்கொண்டுபாரும் கருணாமூர்த்தி! என்னைக் கடாட்சியும்" என்று, வேண்டிக்கொள்வதை விட்டுவிட்டு, விரக்தியை ஏன் வீசுகிறார்? மக்களின் குறைகள் தனது பூர்வஜென்மத்தின் பாபங்களெனில், அத்தகைய பாபாத்மாஏன்,பதவியிலிருக்க வேண்டும்! அவருடைய பூர்வ ஜென்மபாபங்கள், மக்களை வலும் வருவதைச் சகித்துக்கொண்டு, ஆட்சி பீடத்திலேன் அமர்ந்திருக்க வேண்டும்! தன்னை ஒரு பக்தன், பக்தன் என்று சொல்லிக்கொள்ளுகிறாரே, அத்தகைய பக்தர் இத்தனை வயதுவரை பஜித்தும் தனது பூர்வஜென்ம பாபம்போகவில்லை— மக்களின் குறைகளாகவந்து தன்னைத் தாக்குகிறது என்றால், என்ன பொருள்? அவ்வளவு பெரிய பாபாத்மா ஆச்சாரியார் என்பதா! அல்லது, பாபங்களைக் கழுவமுடியவில்லை, பக்திப் பஜனைமூலம் என்பதா!! விளக்கம் வேண்டும் இதற்கு. அவர் ஒரு முதலமைச்சர், ஜடாமுடிதாரியல்ல! அவர் சங்கராச்சாரி பீடத்திலிருந்தால், மக்கள், சூடம் தீபம் வாங்கிச் சென்றிருக்கலாம்— பக்தியுள்ளோர். 'திருமலையானுக்கு கோவிந்தம்!' எனும், சேவானு பூஜையிலிறங்கியவராயிருந்தால், காசைச் சில்லரையாக்கி, வீசிவிட்டுப் போவர்! ஆனால், அவர் முதலமைச்சர்என்பதாலேயே, மகஜரைத் தூக்கிக்கொண்டு போயினர். மகஜருக்கு கிடைத்த பதில், இது.

*

"மக்கள் நன்றாக வாழ்வர்— ராஜாஜி சர்க்கார் எல்லா நன்மைகளையும் செய்யும்" என்று, இத்தகைய மகானுபாவரைப்பற்றித் தான், காங்கிரஸ் ஏடுகளும், பிரச்சாரப் பீரங்கிகளும் முழக்கமிடுகின்றன. சென்னைக் கடுத்த பூந்தமல்லியில், செங்கற்பட்டு ஜில்லா காங்கிரஸ் மாநாடெனும் பெயரால் சினிமா கொட்டகை (சினிமா கொட்டகையா? என்று திரும்பிப் போய்விடவில்லை ஆச்சாரியார்!) பொன்றில் கூடி, இத்திருவந்தாதியைத் திருப்பித் திருப்பி பாடியிருக்கின்றனர். அதை அப்படியே ஒரு எழுத்தும் விடாமல், பிரசுரித்துள்ளன தேசிய ஏடுகள்! அந்த மாநாட்டில் பேசிய, 'ஜரிகைப் பிரமுகர்' ஒருவர், 'ராஜாஜி பஜனை'யைத் தொடர்ந்து பாடிவிட்டு, "இத்தகைய ராஜாஜியை ஆதரிக்க, ஒதுங்கி நிற்கும் காங்கிரசல்லாத எம். எல். ஏக்களே வாருங்கள்" என்று, 'ஒலி பெருக்கி விடுத்தது' அனுப்பினராம். மகஜர் நீட்டிய மக்களைக்கடிந்

(6-ம் பக்கம் பார்க்க)

திருச்சி பெருநகர் தி. மு. க. நிதி நாடகம்

8—11—52 சனி இரவு 10-மணிக்கு

திருச்சி தேவர் மன்றத்தில்

சி. என். அண்ணாதுரை அவர்கள் தலைமையில்

தோழியர்கள் அலமேலு அப்பாதுரை, டாக்டர் தர்மாம்பாள், மூவலூர் ராமாமிர்தத்தம்மையார் மற்றும் பல இயக்க பெண்கள் நடிக்கும்,

"போராட்டம்"

நாடகம் நடைபெறும்.

டிக்கெட் விபரம்:- ரூ. 5, 3, 2, 1. பெண்களுக்கு 0—8—0

வடஆற்காடு தென்ஆற்காடு செங்கற்பட்டு

மாவட்டக் கிளைக் கழகங்களின் தேர்தல்

தேர்தல் நாள் 2—11—52 ஞாயிறு

தி. மு. க. சட்டதிட்டங்கள் 97-வது பிரிவின்படி வட ஆற்காடு—தென்ஆற்காடு — செங்கற்பட்டு மாவட்டங்களிலுள்ள கிளைக் கழகங்களின் உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுவினையும், மாவட்டப் பிரதிநிதியையும் தேர்ந்தெடுக்க 2—11—52 ஞாயிற்றுக்கிழமையைத் தேர்தல் நாளாக நிர்ணயிக்கிறேன்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும், புதிதாகக் கழகத்தைத் துவக்கியிருந்தாலும் 2—11—52ல் மீண்டும் கூடிச்செயற்குழுவை உறுதிசெய்துகொண்டு மாவட்டப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்தல் முடிவுகளை 8–11–52-க்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர் துணைச்செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதி, நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்களை, அதற்கென்று அச்சிடிக்கப்பட்டுள்ள கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும்.

'பதிவுச் சீட்டு' தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கழகச் சட்டதிட்ட புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி தேர்தல் நடைபெற வேண்டும்.

தேர்தல் முடிவைக் கொண்டுதான் கிளைக்கழகம் தலைமை நிலையத்தில் பதிவு செய்யப்படும்.

உறுப்பினர் ரசீது பாக்கியோ, சந்தாத்தொகை பாக்கியோ வைத்திருக்கும் கிளைக்கழகம் எதுவும் பதிவு செய்யப்படமாட்டாது.

குறைபாடுகள் ஏதுமின்றி 2—11—52-ல் தேர்தல் நடத்தும் கிளைக்கழகம் மட்டுமே மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும்.

ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர், செயற்குழுவினர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். விளம்பர உறுப்பினர் தேவையில்லை.

சிற்றூர்க்கிளை ஒரு பிரதிநிதியையும், நகரக் கிளை; நகர மக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் எவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக்கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

வட்டாரக் கிளைகள் (MuniciPal ward) அமைந்த நகரங்களில் ஒவ்வொரு வட்டாரக் கிளையும் நகரக் கிளைக்கு இரண்டு இரண்டு பிரதிநிதிகளை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

செயலாளர், துணைச் செயலாளர் பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும் 21 பேருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

பொதுச் செயலாளர்,
'அறிவகம்'
இராயபுரம், சென்னை 13.

★

மஜீத் குடும்ப நிதி

★

மஜீத் குடும்பத்திற்காக, நெல்லிக்குப்பம் வட்டாரத்தில், நிலம் வாங்கித் தரும் பொறுப்பை, அம்மாவட்டத் தோழர்களிடமே ஒப்படைக்கப் பட்டுள்ளது. கடலூர்த் தோழர் எஸ். எஸ். சந்திரசேகர், நில சம்பந்தமான சில தகவல்கள் தந்துள்ளார். நம் தோழர் — வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி அவர்கள், அந்நில சம்மந்தமான பத்திரங்களையெல்லாம் பார்வையிட்டு, நிலத்தை வாங்க ஏற்பாடு செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அந்த வட்டத்திலுள்ள இயக்கத் தோழர்கள், இவ்விஷயத்தில் ஒத்துழைக்கும்படி வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம். நிதி சேர்த்து, முடித்த பிறகும் காலங்கடத்திக் கொண்டிருப்பது சரியல்ல என்பதையெண்ணி, தக்க நிலங்கள் வேறு ஏதேனும், இருந்தாலும், உடன் தோழர் இளம்வழுதி அவர்களுக்குத் தகவல் தந்து, இந்த நிதி நிகழ்ச்சியை விரைவில் முடிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிதிக் குழுவினர்.

★

சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
2. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத் தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

மானேஜர்.

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் ★ புது நிர்வாகிகள் ★

கோவை மாவட்டம்

கொமாலிங்கம்

செய: ப. மாரியப்பன், துணை: நா. மருதமுத்து, பொருள்: எஸ். முகம்மது கனி, மாவட்டப் கே. ஆர். தங்கம், செயற்கு 13 பேர்.

குன்னக்காபாளையம்

செய: வை. மல்லய்யன், துணை: ப. கந்தசாமி, பொரு: ஆ. ஆறுமுகம், மாவட்டப் பு. ஆறுமுகம், செயற்குழு 10 பேர்.

உதகமண்டலம்

செய: பே. ஆறுமுகம், துணை: டி. நஞ்சுண்டன், பொரு: என். எஸ். எம். ஆறுமுகம், மாவட்டப்: பே. ஆறுமுகம், செயற்குழு 7 பேர்.

காதக்கோட்டை

செய: ந. சின்னமுத்துசாமி, துணை: எம். பழனிசாமி, பொரு: கே. சுப்ரமணியம், மாவட்டப்: கே. கண்ணுசாமி, செயற்குழு 16 பேர்.

ஆயக்கவுண்டன்பாளையம்

செய: பு. நாச்சிமுத்து, துணை: பெ. ரா. ரங்கசாமி, பொரு: மு. க. நாச்சிமுத்து, மாவட்டப்: கோ. பே. பழனிச்சாமி, செயற்குழு 17 பேர்.

மதுரை மாவட்டம்

மேலூர்

செய: எ. வேலுசாமி, துணை: ஆர். விஜயரங்கன், பொரு: மு. ராமு. மாவட்டப்: சி. தியாகராசன், வி. சாமிநாதன், செயற்குழு 9 பேர்.

சம்பட்டிபுரம்

செய: க. சி. கலியபெருமாள், துணை: கோ. சவுந்தரபாண்டியன், பொரு: வி. நடராசன், மாவட்டப்: க. சி. களயபெருமாள், செயற்குழு 6 பேர்.

நாகல் நகர்

செய: இரா. கிருஷ்ணசாமி, துணை: பி. எ. காதர், பொரு: எ. இராசு, மாவட்டப்: இரா. கிருஷ்ணசாமி, செயற்குழு 11 பேர்.

ரோசனப்பட்டி

செய: பெ. சின்னவீரன், துணை: ஞா. வாசுதேவன், பொரு: சு. சத்திவேல், மாவட்டப்: து. வெங்கட்டராமன், செயற்குழு 7 பேர்.

சக்கம்பட்டி

செய: கு. முத்தையா, துணை: கா. சு. அழகர்சாமி, பொரு: சு. திருமலை: மாவட்டப்: ச. அ. சடையாண்டி, செயற்குழு 11 போ.

பள்ளப்பட்டி

செய: எம். சுருளி, துணை: எஸ். சின்னசாமி, பொரு: பி. எஸ். டி. தெய்வநாயகம், மாவட்டப்: பி. அழகர்சாமி, செயற்குழு 11 பேர்.

பலக்கனூத்து

செய: எஸ். தம்பித்துரை, துணை: ஆர். எம். வேலு, பொரு: கே. எஸ். மூர்த்தி, மாவட்டப்: எஸ். தம்பித்துரை, செயற்குழு 9 பேர்.

சங்கராபுரம்

செய: பே. ஆங்சன், துணை: மா. வீராசாமி, பொரு: கு. கிருட்டினன், மாவட்டப்: பே. ஆங்சன், கு. கிருட்டினன், செயற்குழு 4 பேர்.

துரைச்சாமிபுரம்

செய: ச. சற்குணன், துணை: முத்துராமலிங்கம், பொருளாளர்: சோலைமலை, மாவட்டப்: அழகுமலை, பழனிச்சாமி செயற்குழு 7-பேர்

பழனி

செயலாளா: இரா. ராமச்சந்திரன், துணை: கே. கருப்புச்சாமி, பொருள் வெ. தியாகராசன், மாவட்டப். பி. எஸ். ஷேக், கே. எஸ். ஆர். சாமி. செயற்குழு: 10 பேர்

வல்லவராயன்பட்டி

செய: செ. கரிகாலன், துணை: ரா. மூக்கையா, பொருள்: மு. நடராசன், மாவட்டப்: எ. பி. முத்துவெள்ளை செயற்குழு 14 பேர்

ஆத்தூர்

செய: கெ. வீரப்பன், துணை: மு. காளியப்பன், பொருள்: சு. பாண்டிதாசன், மாவட்டப் கே. எ. பாலகிருஷ்ணன், க. அழகுசுந்தரம். செயற்கு: 11 பேர்.

போடிநாயக்கனூர்

செய: கா. மாமுண்டி, துணை: ம. சந்தசாமி, பொருளாளர்: ச. வ. சவுந்தரபாண்டியன், மாவட்டப்: கு. நடராசன். செயற்குழு: 20 பேர்.

சேலம் மாவட்டம்

கல்விப்பாளையம்

செய: ப. ஆறுமுகம், துணை: ந. ஆறுமுகம், பொருள்: மு. க. ஆறுமுகம், மாவட்டப்: மு. ராசலிங்கம். செயற்குழு: 21-பேர்.

பொத்தனூர்

செய: மலை. ஜெகநாதன், துணை: க. சொ. துரைசாமி, பொருள்: க. கணேசன், மாவட்டப்: இரா. செகநாதன். செயற்குழு 13-பேர்.

நன்செய் இடையாறு

செயலாளர்: க. பெ. வடிவேலன், துணை: 'தன்மானத்தமிழன்' பொரு மெ. வீரப்பன், மாவட்டப்: ராம. பாலகிருஷ்ணன். செயற்குழு: 20-பேர்.

அம்மம்பாளையம்

செயலா: எ. எம். அங்கமுத்து, துணை: கே: வையாபுரி, பொருள்: அ. குள்ளு மாவட்டப்: மா. பொன்னுகரன். செயற்குழு: 7 பேர்.

தஞ்சை மாவட்டம்

பட்டுக்கோட்டை

செய: கே.எஸ். சிவராமன், துணை ஆர். சீனிவாசன், பொருள்: சி. வீராசாமி, யாவட்டப்: கே. எஸ். சிவராமன், செயற்குழு 13 பேர்.

வைதீஸ்வரன்கோயில்

செய: வை. உத்ரபதி, துணை: இரா. கோவிந்தராசன், பொருள்: அ. வி. முத்துகிருஷ்ணன், மாவட்டப்: ஆர். ராமச்சந்திரன், செயற்குழு 9 பேர்.

தஞ்சாவூர்

செய: கே. பட்டு, துணை: டி.எஸ் ராமதாஸ், பொருள்: எஸ். பெத்தண்ணன், மாவட்டப்: எம். எம். நடராசன், ஏ. கே. வேலன், கே.ஜி. ராசன், எச். செல்வராஜ், ஏ. வி. பதி, டி. கே. சீனிவாசன், செயற்குழு 19 பேர்.

விண்ணமங்கலம்

செய: பொ-சங்கிலிஅய்யா, துணை வே. துரைராசன், பொருள்: த. நாகராசன், மாவட்டப்: ரெ. ராசு, செயற்கு 16 பேர்.

ஆயக்காரன்புலம் 4-ம் சேத்தி

செய: ரெ-சண்முகசுந்தரம், துணை வீ. சுப்பையன், பொருள்: சு. வைரப்பன், மாவட்டப்: சீ. ராமலிங்கம், செயற்குழு 9 பேர்.

மேட்டுப்பாளையம்

செய: கு. சண்முகம், துணை: கு. நடராசன், பொருள்: இரெ. சௌ. பாண்டியன், மாவட்டப்: க. ராமன், செயற்குழு 7 பேர்.

குருவிக்கரம்பை

செய: ம-மணி, துணை: கே-சோமசுந்தரம், பொருள்: வி. ராமசாமி, மாவட்டப்: அ. கருப்பையா, செயற்குழு 7 பேர்.

நன்னிலம்

செய: ரெ-வேங்கடாசலம், துணை: நாரண- அரங்கையா, பொருள்: வா. ஜெயவேல், மாவட்டப்: ரெ. வேங்கடாசலம், நாரண-அரங்கையா செயற்குழு 12 பேர்.

கச்சமங்கலம்

செய: பெ. ராவணன், துணை: ம. வில்சன், பொருள்: மு. இளவகண்ணன், மாவட்டப்: மா. பெ. சாமி, செயற்குழு 7 பேர்.

காளி

செய: ஏ. வி. சாமி, துணை. எஸ். கே. எம். சாமி, பொருள்: என். அய்யாதுரை, மாவட்டப்: கே-ஆதப்பன், செயற்குழு 5 பேர்.

கோகூர்

செய: பொ. கோதண்டராமன், துணை: பெ. அமிர்தலிங்கம், பொருள்: பொ: தட்சணாமூர்த்தி, மாவட்டப்: பொ. கோதண்டராமன் செய்ற்குழு 11 பேர்.

கூப்பாச்சிக்கோட்டை

செய: சி. வை. உத்ரபதி, துணை: வே. முருகையன், பொருள்; ச. பழனி, மாவட்டப்: சி. கா. முத்து, செயற்குழு 13 பேர்.

திருச்சி மாவட்டம்

கரூர்

செய: கே.ஏ. முருகேசன், துணை: எம். கே. கரிகாலன், பொருள்: ஆர். ராதாகிருஷ்ணன், மாவட்டப்: என். ஆர். ராமசாமி, பி. எஸ். முத்து, செயற்குழு 6 பேர்.

பொன்னமராவதி

செய: எம். எம். நடராசன், துணை: நல்ல. சுப்பையா, பொருள்: மு. இளம்வழுதி, மாவட்டப்: செ. தர்மராசன், செயற்குழு 13 பேர்.

தொண்டமாநல்லூர்

செய: ஐ. செபாஸ்டியன், துணை: எம். பி. முத்தையா, பொரு: கா. அப்துல்கனி, மாவட்டப்: எம். ரத்தினம், ஐ. செபாஸ்டியன், செயற்குழு 11 பேர்.

அரிமழம்

செய: வெ. முத்துவீரப்பன், துணை: வெ. செல்லப்பன், பொரு: அழகுசெல்லப்பா, மாவட்டப்: இராம. சீனிவாசன், செயற்குழு விபரம் இல்லை.

வேலாயுதம்பாளையம்

செய: வை. ரத்தினவேலு, துணை: ஐ. ஷேக் மகமத், பொரு: கே. பெரியசாமி, மாவட்டப்: வை. ரத்தினவேலு, செய்ற்குழு 11 பேர்.

கறம்பக்குடி

செய: கோ. சக்கரபாணி, துணை: சே. சுலைமான், பொரு: யூ. மு. அனீபா, மாவட்டட்: ந. அ. சுலைமான், செயற்குழு 11 பேர்.

அண்ணங்காரம்பேட்டை

செய: கு. தெய்வசிகாமணி, துணை: ஆ. மாணிக்கம், பொருள்: கு. கோவிந்தசாமி, மாவட்டப்: சா. ராமலிங்கம், நா. ராசமாணிக்கம், செயற்குழு 11 பேர்.

மூங்கில்பாடி

செய: ஆ. நாராயணசாமி, துணை: ந. ரா. நடேசன், பொரு: க. சிவசாமி, மாவட்டப்: ம. வடிவேல், பூ. தனபால், செயற்குழு 15 பேர்.

★

முகவரி மாற்றம்

இனி எனக்குக் கடிதங்கள் எழுதுவோர் கீழ்க் கண்ட புதிய முகவரிக்கே எழுதுங்கள்.

தில்லை-வில்லாளன்,
'அறிவகம்'
தி. மு. க. தலைமை நிலையம்,
இராயபுரம்; சென்னை—13.

மஜீத் குடும்பத்தினர்

பொதுச் செயலாளரைக் கண்டனர்.

1—10—52ல், கடலூர் பொதுக் கூட்டத்திற்குச் சென்றிருந்த பொதுச் செயலாளர் சி. என். ஏ., அவர்களை, மறைந்த மஜீத் அவர்களின் குடும்பத்தார், கண்டு, தங்கள் துயரங்களை எடுத்துரைத்தனர். பொதுச் செயலாளர், சேர்ந்துள்ள நிதிமூலம் விரைவில் நல்ல ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டு, அவர்களுக்கு, பணஉதவியும் செய்தார். அவர்கள் வணக்கம் தெரிவித்து நெல்லிக்குப்பம் திரும்பிச் சென்றனர்.

★

அறிவகத்தில் நூலகம் அமைகிறது!

★

சென்னையிலே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையகமாம் அறிவகத்திலே, நூலகம் ஒன்று நிறுவி, இயக்கப் பேச்சாளருக்கும், பணியாளருக்கும், மற்றுமுள்ள எல்லோருக்கும் பயன்படச்செய்யலாம் என்று திட்டமிட்டுள்ளேன்.

அந் நூலகத்திற்கு, ஏடுகளையும், அதற்கு வேண்டிய பிற சாதனங்களையும் உங்களிடமிருந்தே எதிர்பார்க்கிறேன்.

ஏடு படித்திடுவோர், ஏடுகளைத் திரட்டிவைத்திருப்போர், பழைய ஏடுகளையெல்லாம் பாதுகாத்திருப்போர் — ஏடு பிடிக்கவும், படிக்கவும், படிக்காதவருக்கு, தாம் படித்தவற்றை எடுத்துரைக்கும் ஆர்வங்கொண்டோர் எல்லோரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன் — அறிவகத்திலே அமையும் நூலகத்திற்கு, உங்கள் காணிக்கையாக ஏடுகளை அனுப்புங்கள். பழைய ஏடுகளாயிற்றே என்றெண்ணவேண்டாம். அவைகள் தாம், தேடினாலும் கிடைக்காத செல்வங்கள். புதிய ஏடுகளை வாங்கிடுவோர் அவ்வேடுகளை அனுப்புங்கள்.

ஏடுகள் வந்து சேரவேண்டிய முகவரி கீழே தரப்பட்டுள்ளது— ஆகவே, ஏட்டறிவால் நாட்டிலே உள்ள குருட்டறிவை விரட்டிடும், நூலக நல்லறப் பணிக்கு, உதவுங்கள்.

நூல் நிலையப் பொறுப்பாளர்
'அறிவகம்'
இராயபுரம், சென்னை 13.

அன்பன்,
அண்ணாதுரை

1-ம் பக்க தொடர்ச்சி

கசப்பும் உண்டாகி, வீண்சண்டை விளைவதை, எவரும் விரும்பார். ஆனால், இந்த அறிவுரை, தரப்பட்ட நோத்தையும், தந்த சபையும் சிந்திக்கும்போதுதான், வெள்ளையன் காட்டும் பாசமும் நேசமும் கவனத்துக்கு வருகிறது.

கவர்னர் அறிவுரை நல்குகிறார், இப்போது அவர்மட்டுமல்ல, வட இந்தியத் தலைவர்கள் எல்லாம்இங்கு வரும்போது, இதுபோன்ற அறிவுரைகளை வழங்கியே செல்கின்றனர்.

அண்மையில் வந்துபோன, பண்டித நேரு, வடநாட்டிலிருக்கும் மொழிவெறியைக் கண்டித்தார்! அதே நோத்தில், நம்மவரையும் தாக்கினார்!!

நம்மவரைத் தாக்குவதிலும், ஏசுவதிலும், ஆச்சரியப்படக் கூடியதற்கு எதுவுமில்லை. ஏனெனில், அது பரம்பரைப் பழக்கம்! ஆனால், வடநாட்டினரையும் கண்டிப்பது போலப் பேசுவதென்பது, பழக்கமான காரியமல்ல.

புதிய காட்சியினை, அடிக்கடி, அவர்தம் பேச்சிலே காணமுடிகிறது. தம்மவருக்கு அறிவுரைகள் கூறுகின்றனர்! அனுசரித்து நடக்குமாறு, தெளிவுரை வழங்குகின்றனர்!!

அவர்தம் தெளிவுரையையும், அறிவுரையையும் காணும் நமது தேசியத் தோழன், நமக்கு அவைகளைச் சுட்டிக் காட்டுகிறான். "துள்ளுகிறார்கள் வடநாட்டார் என்று சொன்னாயே. பார், அவர் தம் துடுக்கையும் கண்டிக்கிறார், எமது நேரு"—என்ற தொனியில். இவர்கள் இவ்விதம் நம்மைப்பார்த்துப் பேசவேண்டும் என்பதற்காகத்தான், நேருபோன்றோர், மேற்படி வார்த்தைகளைச் சிதறுவதும்!

முதலாளிகள், அனுசரித்துநடக்க வேண்டிய காலம் இது.

பணம் தேடுவோன், பாசத்தோடு லாபம் சம்பாதிக்க வேண்டிய சூழ்நிலை, இப்போது.

முதலாளித்துவ வளர்ச்சியில், ஏற்பட்டிருக்கும் இந்த சாதுர்யமான கட்டத்தை, வடநாட்டதிபர்களும், நன்றாக அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

வெள்ளையன், பணஅரசைமட்டும் பாதுகாக்க விரும்புகிறான்!

வடநாட்டான், பண அரசைத் தரும் ஆதிக்க அரசையும் காப்பாற்றிக்கொள்ள ஆசைப்படுகிறான்!!

தனது பண அரசைக் காப்பாற்றிக்கொள்ள, வடநாட்டு ஆலையரசர்களின் அத்யந்த நண்பனாகியிருக்கிறான், வெள்ளையன்.

தனது ஆதிக்க அரசையும் பண அரசையும் காத்துக்கொள்ள, தென்னாட்டுச்சுயநலவாதிகளையும்,வாணிப வேந்தர்களையும், வளைந்துப் போடுகிறான், வடநாட்டான்.

வாணிபவேந்தர்களுக்கும், பிரபுக்களுக்கும் இடையே கிடந்து அல்லல் படும் மக்களை மயக்கப் பாசவலையை, வீசுகின்றனர் தேசியத் தலைவர்கள்.

அதைத்தான், கர்வனர்பிரான், ஓதியிருக்கிறார், குஜராத்திகளுக்கு.

பாசமும் நேசமும் பாரம்பரியமாக இருந்து வந்தால் சந்தேகமும் அச்சமும் வராது! ஆனால், இன்று பாசவலை வீசும் பரம்பரை, நம்மவர் மீது கொட்டிய கோபாக்கினியையும் அலட்சியத்தையும், எவ்விதம் நாம் மறந்துவிட முடியும்? அப்பப்பா! கொஞ்சநஞ்சமா, அவர்கள் வீசியது!!

வெள்ளையன், தனது பொருள்களுக்கான மார்க்கெட்டாக இந்தியா பயன்படும் என்று நம்புகிறான்.

தொழில் துறையில் ஓரளவு முன்னேறியுள்ள வடநாட்டான், தென்னிந்தியாவைத்தனதுமார்க்கெட்டாகக் கருதுகிறான்.

மாஞ்செஸ்டரும் லங்காஷயரும், பம்பாயுடன் 'பேரம்' நடத்துகிறது. பம்பாயும் ஆமதாபாத்தும்,சென்னையைப்பார்க்கின்றன.

வடநாட்டு அதிபர்கள், வெள்ளையர்களுடன் கைகோர்த்துக்கொண்டு வாணிபத்திலீடுபடுகின்றனர். வெள்ளையன், தான் கொண்டுவரும் மூலதனத்தோடு வடநாட்டதிபர்களையும் பங்கு போடச்சொல்லி ஆலைகளை அமைக்கிறான்.

வடநாட்டார், தம்மோடு கூட்டுச்சேர்த்துக் கொண்டு தென்னாட்டவரோடு சேர்ந்து 'கம்பெனி'களை ஏற்படுத்துகிறான் இங்கு.

இந்தக் கம்பெனிகள், வடநாட்டாதிக்கத்தின் பாசத்தால் பலன்பெற விரும்புகின்றன—பம்பாய் ஆலையரசர்கள், வெள்ளையன் மூலதனத்தால் ஆலையரசுகளை அமைக்க விருப்புவதுபோல.

தம்மவருக்குச் சாதகமாக டில்லி அரசாங்கம் நடந்து கொள்கிறது! வெளிநாட்டு மூலதன ஒத்துழைப்பையும் பெற்றுத்தருகிறது — உள்நாட்டு மார்க்கெட்டையும் தங்கு தடையில்லாமல் கிடைக்கச் செய்கிறது.

துப்பாக்கியாலும் பீரங்கியாலும் மார்க்கெட்டுக்களைத் தேடவேண்டிய சங்கடம், வடநாட்டு அதிபர்களுக்கு இல்லை.

அவைகளைவிட மக்களை மயக்க வைக்கும் 'எல்லோரும் இந்தியர்' எனும், பாசவலை, வடவர் கையிலிருக்கிறது.

இந்த வலையை வீசியே, பலரை மயக்குகின்றனர்— முதலாளித்துவ வளர்ச்சியின் சூட்சுமம் நிரம்பியகட்டம் இது.

தொழில் துறையில் பாலைவனமாகக்கிடக்கும், தெற்கை, இழந்துவிட எவரும் விரும்பவில்லை. அருமையான மார்க்கெட்! பணத்தோட்டம், பயிரிடக்கூடிய பிரதேசம்!!

ஆகவேதான், அறிவுரை வழங்கியிருக்கிறார், கவர்னர் பெருமான் குஜராத்திகளுக்கு — பாசவலை, போடும்படியாக. இந்தப் பாசப் பாதையை அவர் காட்டும் நோத்தில், நம்முடைய பரிதாப நிலையை எண்ணி நாம் வெட்கப்படுகிறோம்!

தெற்கு மார்க்கெட் பூமியாக இருக்கிறது — வடக்கில் வளர்ந்திருக்குமளவு ஆலைகள் இல்லை இங்கு. தொழிலதிபர்கள் தெற்கில் கிடையாது! 'கம்பெனி' நடத்தும் முத்தையாக்கள் இருக்கிறார்கள்!! சாரங்கபாணி வைரஒளியில் மயங்கி, கோவிந்ததாஸ் வழங்கும் பட்டுப் பகட்டில் திசைமாறி, மார்வாடி தரும் 'கடன்' தொகையையிணைத்து காலம் ஓட்டும் கனதனவான்கள் இருக்கிறார்கள். கவர்னரின் கைலாகும், பிரதமரின்பாராட்டுமே, அவர்களது இலட்சிய மாகிவிட்டது!

தொழில் துறையில் வளர்ச்சி பெற்றோர் எவருமே இல்லை, இங்கு! ஆனால், மார்க்கெட்' மூலம் வாணிபம் நடாத்தும் ஏஜண்டுகள் நிறைய இருக்கிறார்கள்!! பெரிய பணக்காரர் என்றால், நம் கண்முன் முத்தையாவும், கோவைச் சீமான்களுமே தென்படுவர். ஆனால் வடக்கில்? பட்டியல் பெரிதாக மட்டுமல்ல! பயங் காட்டிக்கொண்டும் இருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் "Eastern Economist" எனும் இதழ், இந்தியாவிலிருக்கும் தொழிலதிபர்களைக் குறிப்பிட்டது—'சிலர் தான்' எனும் மனக்குறையோடு. அந்த சிலரும் யார் தெரியுமா? டாடா, பிர்லா, வாடியா, சாராபாய்,! தென்னாட்டவர், எவரும், இல்லை. தென்னாட்டில் அத்தகைய பண அரசு படைத்தோராக, எவரும் இல்லையே என்கிற வருத்தம் அல்ல நமக்கு? இந்த விபரம், நமது தெற்கு, தொழில் துறையில் அடைந்திருக்கும் கேவலத்தைக் காட்டுவதாகும்.

நாம்—ஒரு அருமையான 'மார்க்கெட்' அதை, இழந்துவிடக் கூடாதென்பதில் வடநாட்டுத் தொழிலதிபர்களும், அரசு அதிபர்களும், மிகமிகச் சிரத்தையோடிருக்கின்றனர்.

ஆனால் வளர்ந்துவரும் அதிருப்தியையும் அறிவதால், ஆத்திரக் கனலை வீசியோர், பாச வலையை வீசச் சொல்கின்றனர்.

இது முதலாளித்துவத்தின் சாதுர்யமான கட்டம். அந்தக் கட்டத்துக்கு, குஜராத்திகளைக் கூப்பிடுகிறார், பிரகாசா! அந்த அளவுக்கு வடக்கும் வளர்ந்திருக்கிறது—நாம் 'நல்ல'மார்க்கெட்'டாக இருப்பதால்.

❁

கழகத் தோழர்கள் கவனிக்க

கல்லூரிப் படிப்பிலே ஈடுபட்டிருக்கும் நான் விடுமுறை நாட்களைத் தவிர, கூட்டங்களில் கலந்துகொள்வதற்கியலாத நிலையிலுள்ளேன். எனவே, தயை செய்து யாரும் அழைப்பு முடங்கல் தீட்டவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக சென்னையைப் பொறுத்தவரை, ஒருசிலநண்பர்கள் என்னை வினவாமலே, ஒப்புதல் பெறாமலே, மன்றங்கள், கழகங்கள் சார்பில் எனதுபெயரைப்பொறித்து மக்களுக்கு ஏமாற்றத்தையும் எனக்கு இழிவையும் தரும்செய்கைகளைத் தொடர்ந்து நடத்துகிறார்கள். இது வருந்தத்தக்கதும், கண்டிக்கத்தகுந்ததுமான செய்கையாகும். இது விஷயத்தில் நான் குற்றவாளியல்ல—பொதுமக்கள் ஏமாற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடை விடுமுறையில் கழகத் தோழர்களின் அன்பழைப்பிற்குக் கட்டுப்பட்டவனாவேன்.

அன்பன்,
கி. மனோகரன்.

★

கண்ணதாசன் சுற்றுப்பிரயாணம்

25—10—52 நுங்கம்பாக்கம்
26—10—52 எழும்பூர்
30—10—52 குடியாத்தம்
2—11—52 5. 30. P. M.
சைதாப்பேட்டை
7. P. M.
ஆயிரம் விளக்கு
2-வது வாரம்
தேவக்கோட்டை
16—11—52 மீர்சாகிப் பேட்டை.

★

★ "தீவாலி!" ★

23 இடங்களில், தீ!
100 பேருக்குக் காயம்!
ஐந்து வயதுப் பெண் கவலைக்கிடம்!
வாலிபர் ஒருவர்மரணநிலையில்!
பல மாங்கள் எரிந்தன!
தீயணைக்கும் படைக்கு ஓயாவேலை!
சணல்கிடங்குசாம்பலாயிற்று!

கடந்த 18ந் தேதியன்று, கல்கத்தா நகரில் நடைபெற்ற, கோரச் சம்பவங்கள் இவை. வகுப்புக் கலவரப் புயல் மீண்டும் வீசத் துவங்கியதால் ஏற்பட்டதல்ல! கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளுக்குள் ஏற்பட்ட அடிதடியால் உண்டானதல்ல! விஷ்ணு பூஜையின் விளைவு! தீபாவளித் திருநாளில் நடைபெற்ற 'தீவாலி' விபரம் இது.

தீபாவளி பண்டிகையின் விளைவாக இவ்வளவு அலங்கோலங்கள், நடைபெற்றுள்ளன. திருவிழா நாளில் இவ்வளவு தீய நிகழ்ச்சிகள்! எதிரிகளால் ஏற்பட்டவை அல்ல; தமக்குத் தாமே தேடிக்கொண்டவை. எம்பெருமானின் திருநாளில் இத்தனை விபத்துகள்! கோரச் சம்பவங்கள்!! பணம் பாழானது மட்டுமல்ல, உயிருக்கே சேதம் ஏற்பட்டிருக்கிறது. மகேஸ்வரன், மக்களைப் பார்த்து என்ன நினைப்பார்? மகிழ்வாரா, அவர்கள் காட்டிய சூடதீடனைவேதயங்களைக் கண்டு! அல்லது, 'மதிமோசம் போகும் மனிதர்களைப்பார்' என்று நொந்துக் கொள்வாரா!

வீண் விழாக்களைக் கண்டிக்கும் நாம் இதனைக் குறிப்பிட்டால், 'நாஸ்திகர்' எனும் நிந்தனைக்காளாகிறோம். கண்டிக்கப்படுகிறோம். "தண்டிக்கவேண்டும் இத்தகாதவர்களை" என கர்ஜிக்கிறார், கனம் ஆச்சாரியார். மதசம்பிரதாயப்படி பூஜானுதி காரியங்கள் நடைபெற வேண்டும் — அப்போதுதான் நற்காலம் கிட்டும் என்று, போகுமிடங்களிலெல்லாம், போதிக்கிறார். ஆனால், அந்த மத சம்பிரதாயங்களை அனுஷ்டிக்க முற்படுவதால் நடைபெறும் கோலாகலங்கள் கொஞ்சநஞ்சமா!

இந்த ஏறுமாறான சம்பவங்களால், எவ்வளவு பணமும் அறிவும் பாழாகிறது. பகவானைப் பஜிப்போர், மனதுக்குள்ளேயே தியானம் செய்வதைப் பற்றி, நமக்குக் கவலையில்லை! ஆனால், 'இதுதான் மார்க்க போதனை' என்று கூறிக்கொண்டு, அறிவையும் செல்வத்தையுமன்றோ, பாழாக்கிக் கொள்கின்றனர்! இதைச் சுட்டிக் காட்ட வேண்டிய தலைவர்களோ, மக்களை இன்னும் பழைமைக் குழியில் விழச் செய்துகொண்டுதானே உள்ளனர். இந்த விசித்திரத்தை, இந்த பூமியிலன்றி எங்கு காண முடியும்? பகவானைப் பஜிக்கும் நாளில் இவ்வளவு பாதகங்கள்! பரிதாபங்கள்!!

தேனி கலவர வழக்கு

18—10—52 தேனி கலவர வழக்கு மதுரை அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் அவர்களின், பெரியகுளம் முகாமில் நடந்தது. குற்றம் சாட்டப்பட்டோரில் தேனி இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி S. S. K. பால்ராஜ் நீங்கலாக, மதுரை ஜில்லாபோர்டு தலைவர் N. R. தியாகராசன், K. சக்திவடிவேல் கவுண்டர் M. P. உள்பட பாக்கி எதிரிகள் கோர்ட்டில் ஆஜராகியிருந்தார்கள். ஒரு எதிரி S. S. K. பால்ராஜ் வராத காரணத்தால் வழக்கு மீண்டும் 1—11—52-ல் ஒத்திவைக்கப்பட்டது. கடந்த 3—10—52-ல் வாயிதாவில் கோர்ட்டில் ஆஜர் ஆகாத எதிரி இரண்டு பேரில் ஒருவர் இன்று கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டார். இன்று தேனி அ. தேவராசன் V. V. குருசாமி உள்பட பல சாட்சிகள் கோர்ட்டில் ஆஜராகியிருந்தார்கள். வழக்கு விசாரணையை காண பெரியகுளம் மாணவர்களும் பொது மக்களும் கோர்ட்டில் ஏராளமாக கூடியிருந்தார்கள்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துரைத்த, ஆச்சாரியாரைக் காப்பாற்ற அரசியல் மகாநாடுகள்கூட்டி 'மகஜர்'கள் அனுப்பும் அவர்களைக் காணும்போது, சிரிப்பதா, அழுவதா என்று நமக்குத் தெரியவில்லை! மக்களின் மகஜரை, ஏளனம் செய்யும் மகானுபாவரை ஆதரிக்க 'மகஜர்கள்' தயாரிக்கிறார்கள்! அதை எடுத்துக்கொண்டு, எம். எல். ஏக்களின் இல்லங்களை நாடிநாடிச் செல்கிறார்கள்!! தேர்தலிலே தம்மைத்தோற்கடித்த மாற்றுக்கட்சி எம். எல். ஏக்களை நோக்கி, மண்டியிடுகிறது, தேசிய இயக்கம். "வா! வா!" என்று, வருந்தி வருந்தி அழைக்கிறது. அது மட்டுமா? ராஜஸ்தான் எனுமிடத்தில், எதிர்கட்சியிலிருந்த எம். எல். ஏ. ஒருவரைத் தூக்கிச்சென்று, பலவந்தப்படுத்தி, 'காங்கிரசில் சேருகிறேன்' என்று கையெழுத்து வாங்கினராம், தேசிய இயக்கத்தினர். அவ்விதம் பலாத்காரத்துக்கு ஆளானமெம்பர் பெயர் தகூர்விஜயசிங் என்பதாகும். அவர், சட்டசபையில், இதனைப் புகார் செய்திருக்கிறார். எவ்வளவு தலையிறக்கம் பாருங்கள்! காங்கிரஸ் கட்சி, தாள் பணிகிறது—இசையாவிட்டால் தண்டு தூக்குகிறது.

வீட்டுக்குள்பூட்டி
பலவந்தம் படுத்தி
கையெழுத்து

வாங்குகிறது, காங்கிரஸ்! காரணம் பதவிமோகம்!! இத்தகைய காங்கிரஸ் கட்சிதான், இங்கும், எதிர்க்கட்சி எம். எல். ஏக்களின் இல்லங்களை வலம் வருகிறது. வெட்கம் இருக்க வேண்டாமா? 'காங்கிரஸ் ஒழிக!' என்று கர்ஜனையிட்டோரைக் கட்டிப்பணைக்கும் துணிவும், மகஜர்விடும் ஆர்வமும், எவ்விதம் பிறக்கும்? அரசியல் அவ்வளவு அநாகரீகக்குப்பையா! தம்மை போட்டியிட்டு, தோற்கடித்து எம். எல். ஏக்களானவரோடு, கூடிக்குலவத்துடிக்கும் காங்கிரசைப்பார்த்து நேற்று காங்கிரஸ் சார்பில் நின்ற அபேட்சகர்கள் என்ன நினைக்கின்றனர்? "பரவாயில்லை — மானம் தானே போகிறது!" என்றுபேசாமலிருந்துவிடமுடியுமா! எவ்வளவு பெரிய இயக்கம் காங்கிரஸ்,— அது மண்டியிடுகிறது! அதுவும் மானத்தை இழந்து!!

இவ்விதம் இழிநிலையில் சீரழியும், தேசிய இயக்கத்தின் கதியை நினைக்கும்போது, நமக்கே பரிதாபம் வருகிறது. எத்தனை யெத்தனை பேர் கட்டி வளர்த்த இயக்கம் அது! இன்று எத்தர்களின் மடமாக ஆகிறதே!!—இந்த அலங்கோலத்துக்கு ஆளான காங்கிரசில் மக்கள் வேறு சேரவேண்டுமாம். 'மகஜர்' — தயாரித்து அனுப்பப்படுகிறது, ஆச்சாரியாரின் பிரசங்கங்கள் மூலம்.

நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் — அவருக்கு. திராவிடத்து மக்கள் அவ்வளவு திக்கற்றவர்களாகிவிடவில்லை தன்னைக்காக்காத அரசு! தகிடுதத்த மூலம் பலம் தேடும் சர்க்கார்! இதனைத்தாங்கி நிற்கும் ஒரு அரசியல் கட்சி!—ஆகியவைகளைக் கண்டு மதிமோசம் போக.

★

காட்டுக் கனி

கோவைச் சீமான் ஆர். கே. சண்முகம், அவர்களது 60ம் ஆண்டு நிறைவுவிழாவை, அக்; 18ந்தேதியன்று கோவையில் விமரிசையாகக் கொண்டாடியிருக்கிறார்கள். நாட்டின் மூளைகள் எனப்போற்றப்படும் பலரும், திருவாளர் சண்முகத்தின் திறமையினையும் சேவையும், பாராட்டிப் பேசியிருக்கின்றனர். சேலம் செல்வர் டாக்டர் பி. வரதராசலுநாயுடுவும், சண்முகத்தைப் புகழ்ந்து சொற்பொழிவாற்றியிருக்கிறார். அவர் வீசிய மணிவாசகங்களில் ஒன்று, "ஆர். கே. சண்முகம் அவர்களைப்போன்ற புத்திக்கூர்மையும், திறமையும் உள்ளவர்களை வடநாடெங்கும் தேடினாலும் காணமுடியாது" என்பதாகும். டாக்டர் நாயுடு, இப்போது ஒரு பிரபலகாங்கிரஸ்காரர்! ('இப்போது' என நாம் குறிப்பிடுவதன்காரணம், இன்னும் கொஞ்சகாலத்தில் எந்தக் கட்சியிலிருப்பார் என்று நமக்குத் தெரியாது என்பதால்) அவர் மேற்படி வார்த்தைகளை சிந்தியிருக்கிறார்— உண்மைதான் ஒப்புக்கொள்கிறோம்! ஆனால், அத்தகைய அறிவின் மேதையைத்தானே, டில்லியினர், வீட்டுக்கனுப்பினர். எவர்கேட்டார்கள்? மோதிலாலின் புதல்வரை,சிறு வயது முதல் அறிவார் சண்முகம்! ஆனால் பெற்றது என்ன? 'போ' எனும் சொல்! பசுபோலத் திரும்பித்தானே வந்தார். 'வராமல்என்ன செய்வார்?' என்று கேட்கிறீர்களா? உண்மைதான்! நேருவுக்கு மேலாக மக்களின் இதயங்களைக் கவர்ந்திருக்கலாம், சண்முகம். பொதுமக்கள், அறிவைமட்டும் புகழ்ந்துவிடுவதில்லை. உண்மைத் தொண்டனைத் தானே போற்றுகிறார்கள். தமது அறுபது ஆண்டுகளில், கால்பகுதியாவது தமக்காக அன்றி தமது மக்களுக்காகச் செலவிட்டிருந்தால்?— காட்டுக்கனி அது! நினைப்பதால் என்ன பயன்!!

★

வருங்காலப்பிரஜை!

"ஏனப்பா, திருடினாய்?"
"பணம் தேவையாயிருந்தது!"
"உனக்கு எதுக்குப்பணம்?"
"பள்ளிக்கூடச் சம்பளம் கட்ட..."

*

அண்மையில், நீதி மன்றம் ஒன்றில், மாணவன் ஒருவன் மீது நடைபெற்ற வழக்கின்போது நீதிபதிக்கும், 'குற்றஞ்சாட்டப்பட்டவனுக்கு' மிடையே, நடை பெற்ற உரையாடல்கள் இவை. மாணவனை எச்சரித்து, விடுவித்தாராம் நீதிபதி! அவன், சிறுவன். படிக்க வேண்டுமெனும் ஆசை! அதனால், பள்ளிக்கூடத்துக்குச் சம்பளம் கட்ட, திருடவேண்டியவனானான். திருடியோ, பிறரிடம் கைநீட்டி யாசித்தோ, கடன்பெற்றோ, படிக்க வேண்டிய சூழநிலையில் ஆயிரமாயிரம் குழந்தைகள் இருக்கிறார்கள் இவர்களைப்பற்றி ,, சமீபத்தில், கொண்டடாப்பட்ட "குழந்தை— வருங்காலப்பிரஜை" என்கிற கல்வி வாரத்தில், எவரும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. அதில் கலந்துகொண்டு பேசியோரெல்லாம் குழந்தைகளை வளர்க்கும் விதம் எப்படி, சரியானவர்களாக தயார் செய்யும் முறை என்ன, என்பது குறித்தே, அருமையானயோசனைகளும் அறிவுரைகளும் வழங்கியிருக்கிறார்கள். அவையனைத்தும், உண்மையில் கவனிக்கப்பட வேண்டியவைதான். இன்றைய குழந்தைதான், நாளைய உலகம்! ஆகவே, குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பில் அதிககவனமும், கவலைகளும் மேற்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் வசதி நிரம்பிய குழந்தைகளைவிட, பள்ளியின் பக்கம்ஒதுங்கவும் அருகதையற்றவர்களாகயிருக்கும் குழந்தைகள் கூட்டம் அதிகம். மிகமிக அதிகம். அவையனைத்தும், கிராமத்துப் புழுதி மேட்டிலே தவழ்ந்து கொண்டிருக்கின்றன! தார் குச்சியும், குப்பைக் கூடையுமாக அலைந்து கொண்டுள்ளன! மாடுகளை மேய்த்து வயிற்றைக் கழுவுக் கொண்டுள்ளன! அந்தக் குழந்தைகளும் வருங்காலப்பிரஜைகள் தான். அவர்களது தொகை அதிகம்! அவர்களுக்காக, என்ன செய்வது? என்பதே. இன்று கவனிக்க வேண்டிய விஷயமாகும் பட்டணங்களில் படிப்பு என்பது இலேசானவிஷயம்! பட்டிக் காடுகளில் அப்படி அல்ல. பணவசதியும், மிட்டா மிராசும்உள்ளோர் வீட்டுக் குழந்தைகள் மட்டுமேபட்டணத்து ஹைஸ்கூலில் சென்று படிக்முடிகிறது—பட்டங்களைப் பெறவும் இயலுகிறது. ஏழைகளாலும் மத்தியதரவர்க்கத் தாராலும், கல்வியின் ஒளியைப் பெறுவதென்பது, எளிதில் இல்லை. இந்தக்குறையைப் போக்க, குழந்தைகளை —வருங்கால பிரஜையாக்கும்' முயற்சிகளைத் துவங்குவோர், சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படைக் காரியங்கள் சமுதாயத் தேரின் அச்சாணியா அதை மறந்து விட்டு, ஏதோ நாங்களும் நடத்திக்காட்டினோம், கல்வியதிகாரிகளும் வந்தார்கள், அறிஞர்களும் பேசினார்கள் என்று 'விழா'க்கள் முடிந்து விடுவதால் பிரயோஜனம் ஏற்படமுடியாது. கல்வியே, அறிவின் தீபம்! ஆனால், கிராமத்தாருக்கும்ஏழைகளுக்கும் எட்டாத தூரத்தில் அது இருக்கிறது. அது எல்லோருக்கும் கிடைத்தாலே, வருங்காலம், தென்றல் வீசும் இன்பச் சோலையாக ஆகும்.

★

நடக்க இருப்பவை

சைதாப்பேட்டை:- தி. மு. க. ஆண்டுவிழா 27—10—52 திங்கள் மாலை காரனீச்சுவரர் கோயிலருகில் தோழர்கள் மு. கருணாநிதி, எம். கன்னியப்பன் எம். சி., கண்ணதாசன், அருண்மொழி பேசுவர்.

திருத்தம்

22—10—52 அன்று—என்று இருந்த — மஜீது கொலை வழக்கு 28—10—52 செவ்வாய் அன்று நடைபெறும்.

தி. மு. க. மாவட்டக் கிளை தேர்தல்கள்

கீழ்க்கண்ட மாவட்டங்களின், மாவட்டக்கிளைகளின் தேர்தல்கள் கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறும். தலைமை நிலையத்தில் பதிவு செய்துகொண்ட கிளைகளுக்கு, 'பிரதிநிதி உரிமைச்சீட்டு,' 'தலைமை நிலையத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெறும் பிரதிநிதி உரிமைச் சீட்டோடு' பாக்கியுள்ள ரசீதுகளையும், பாக்கியுள்ள சந்தா தொகையையும் உடன் எடுத்துக்கொண்டு கிளைக்கழகப் பிரதிநிதி மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள வேண்டும்.

மாவட்டம்.	தேர்தல் நாள்	இடம்.	மணி.	தேர்தல் அதிகாரி
சென்னை	2—11—52	'அறிவகம்' இராயபுரம், சென்னை.	காலை 10-மணி	ப. உ. சண்முகம்.
சேலம்	2—11—52	தி. மு. க. கட்டிடம், வாசகசாலைத்தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.	மாலை 3-மணி	இரா. நெடுஞ்செழியன்.
திருச்சி	2—11—52	திராவிடப்பண்ணை, 9, கிலேதார் தெரு, திருச்சி.	காலை 9-மணி	மு. கருணாநிதி.
மதுரை.	2—11—52	"பனகால் இல்லம்" சோழவந்தான்.	மாலை 3-மணி	அ. பொன்னம்பலனார்.

குறிப்பு:— இராமனாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களின் தேர்தல்கள் 9—11—52 ஞாயறன்றும், தஞ்சை, தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் தேர்தல்கள் 16—11—52 ஞாயறன்றும் நடைபெறும். இடம், நேரம், பின்னால் அறிவிக்கப்படும்.

"அறிவகம்"
இராயபுரம், சென்னை,
21—10—52.

பொறுப்பாளர்,
தலைமை நிலையம்.

Editea Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.